**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of civil procedure)**

**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**

**KEERANUR**

**CASE NO.OS.No.391 /2022**

**Depostition of witness of Plaintiff – P.W.1 (முருகன்)**

**11.04.2023**

**2,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் கோவிந்தசாமி மற்றும் ஜெயலெட்சுமிக்கு பாத்தியப்பட்டது. கோவிந்தசாமி இறந்துவிட்டார். நானும் கோவிந்தசாமியும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள். கோவிந்தசாமிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் இரண்டு பேர் ஆகும்.
கோவிந்த சாமி குடும்பத்தை பற்றி எனக்கு நன்றாக தெரியும். தாவா சொத்தின் விஸ்தீர்ணம் 78 செண்ட் ஆகும். தாவா சொத்தின் சர்வே எண்.98/3 B ஆகும். தாவா சொத்தின் நான்கெல்லைகள் கிழக்கே இட்டரை பாதை, மேற்கே குளம் , தெற்கே இட்டரை பாதை, வடக்கே கருப்பையா சொத்து ஆகும். தாவா சொத்தை யாரிடம் கிரையம் வாங்கினேன் என்றால் ஜெயலெட்சுமியிடம் கிரையம் வாங்கினேன். ஜெயலெட்சுமிக்கு 2 மகன்கள் , 2 மகள்கள் ஆகும். தாவா சொத்தை 2009ல் கிரையம் வாங்கினேன். கிரையம் வாங்கிய சொத்தின் விஸ்தீர்ணம் 78 செண்ட் ஆகும்.

(2,3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)